05.06.2024

O.S.No.184/2015

வா.சா.1.திரு. உடையப்பன் த.பெ.சண்முகம் பிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை தொடர்ச்சி

எனது தந்தை பெயரில் வழங்கப்பட்ட பி மெமோ 9 எண்ணிக்கை அசல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). என் தந்தை பெயரில் உள்ள பி மெமோ அசல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது). என் தந்தை பெயரில் உள்ள 1387 பசலிக்கான கிஸ்தி ரசிது அசல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 1400, 1405, 1408, 1412, 1414, 1417, 1418 பசலிக்களுக்கான எனதுதந்தை பெயரில் உள்ள அடங்கல் கணக்கு உண்மை நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 1420 பசலிக்கான எனது தந்தை பெயரில் உள்ள அடங்கல் கணக்கு உண்மை நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 25.06.2013 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 08.03.2013 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 13.01.2014 தேதியிட்ட மேலூர் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மாவட்ட ஆட்சியரிடம் எனது தந்தை அளித்த புகார் மனு நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி புகார் மனுவினை மதுரை மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு பரிந்துரைத்து நடவடிக்கைக்காக அனுப்பிய குறிப்பாணை நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 18.02.2015 தேதியில் மதுரை மாவட்ட ஆட்சி தலைவர், மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய குறிப்பாணை உண்மை நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது). தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் 6 எண்ணிக்கை (அந்த ஆவணம் வா.சா.ஆ**-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது). குற்ற எண்.23/2015-க்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-16** ஆக குறியீடு செய்யப்படுகிறது). குற்ற எண்.24/2015-க்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ**-17** ஆக குறியீடு செய்யப்படுகிறது).